சிறப்பு குறிப்பு 15

## முக்கிய பொருளாதாரக் கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும் 2015[1]

### உண்மைத் துறை[2]

2015 சனவரி 22 - முக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் சில்லறை விலைகள் பின்வருமாறு குறைக்கப்பட்டன:

- பெற்றோல் (92 ஒக்தேன்) ரூ.33 இனால் லீற்றரொன்றிற்கு ரூ.117 இற்கு
- பெற்றோல் (95 ஒக்தேன்) ரூ.30 இனால் லீற்றரொன்றிற்கு ரூ.128 இற்கு
- தன்னியக்க டீசல் ரூ.16 இனால் லீற்றரொன்றிற்கு ரூ.95 இற்கு
- சிறப்பு டீசல் ரூ.23 இனால் லீற்றரொன்றிற்கு ரூ.110 இற்கு
- மண்ணெண்ணெய் ரூ.16 இனால் லீற்றரொன்றிற்கு ரூ.65 இற்கு
- கைத்தொழில் மண்ணெண்ணெய் ரூ.16 இனால் லீற்றரொன்றிற்கு ரூ.94 இற்கு

2015 சனவரி 30 - மண்ணெண்ணெயின் சில்லறை விலையானது ரூ.6 இனால் லீற்றரொன்றிற்கு ரூ.59 இற்கு குறைக்கப்பட்டது.

- 12.5 கி.கி திரவப் பெற்றோலிய வாயு உருளையின் விலை ரூ.300 இனால் ரூ.1,596 இற்கு குறைக்கப்பட்டது.

2015 பெப்புருவரி 01 - பயணிகள் பேருந்துக் கட்டணங்கள் சராசரியாக 8.2 சதவீதத்தால் குறைக்கப்பட்டன.

2015 பெப்புருவரி 20 - குறிப்பிட்ட சில பொருட்களின் ஆகக்கூடிய சில்லறை விலையானது பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டது:

- சாதாரண போற்லான்ட், போற்லான்ட் சுண்ணாம்பு மற்றும் கட்டுமான சீமெந்து 50 கி.கி பொதியொன்று ரூ.840 இல்
- வெள்ளைச் சீனி (பொதியிடப்படாதது) கி.கி ஒன்றிற்கு ரூ.87 இல்
- முழு ஆடைப் பால்மா 400 கிராம் பொதியொன்று ரூ.325 இலும் 1 கி.கி பொதியொன்று ரூ.810 இல்
- சஸ்டோஜன் 400 கிராம் பொதியொன்று ரூ.1,500 இல்
- கோதுமை மா (பொதியிடப்படாதது) கி.கி ஒன்றிற்கு ரூ.87 இல்
- பச்சைப் பயறு கி.கி ஒன்றிற்கு ரூ.265 இல்
- நெத்தலிக் கருவாடு (இறக்குமதி செய்யப்பட்டது) கி.கி ஒன்றிற்கு ரூ.385 இல்
- தேறிய நிறை 425 கிராம் அல்லது காய்ந்த நிறை 280 கிராம் கொண்ட தகரத்தில் அடைக்கப்பட்ட மீனொன்றிற்கு ரூ.140 இல் தேறிய நிறை 155 கிராம் அல்லது காய்ந்த நிறை 105 கிராம் கொண்ட தகரத்தில் அடைக்கப்பட்ட மீனொன்றிற்கு ரூ.70 இல்
- தூளாக்கப்படாத அல்லது அரைக்கப்படாத கொத்தமல்லி கி.கி ஒன்றிற்கு ரூ.350 இல்
- உழுந்து கி.கி ஒன்றிற்கு ரூ.300 இல்
- மாசிக்கருவாடு கி.கி ஒன்றிற்கு ரூ.1,740 இல்
- அரைத்த அல்லது தூளாக்கப்பட்ட மஞ்சள் கி.கி ஒன்றிற்கு ரூ.800 இல்
- அரைத்த அல்லது தூளாக்கப்பட்ட மிளகாய் கி.கி ஒன்றிற்கு ரூ.400 இல்

---

1. 2015 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளை உள்ளடக்குவதுடன் 2016இன் முதல் மூன்று மாதங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றும் கிட்டிய எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட எதிர்பார்க்கும் கொள்கை மாற்றங்கள் மற்றும் அளவீடுகளை உள்ளடக்குகின்றது.
2. உண்மைத் துறை அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட இறை ஊக்குவிப்புக்களின் விபரங்கள் இறைத் துறையின் கீழ் கொள்கை வழிமுறைகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

2015 யூலை 15 - 12.5 கி.கி திரவ பெற்றோலிய வாயு உருளையின் விலை ரூ.1,496 இற்கு ரூ.100 இனால் குறைக்கப்பட்டது

2015 செத்தெம்பர் 15 - 3 பிரிவு 30 அம்பியர் அல்லது அதற்குக்கூடிய இணைப்பைக் கொண்டிருக்கும் வீட்டுத் துறை நுகர்வோருக்காக பாவனை நேரத்தை அடிப்படையாகக் கொண்ட மின்வலுத் தீர்வை விருப்பத்தேர்வு தீர்வையாக அறிமுகப்படுத்தப்பட்டது. புதிய தீர்வைக்கட்டமைப்பு பின்வருமாறு

| பாவனை நேரம் | வலுக்கட்டணம் (ரூ./கிவாம) | நிலையான கட்டணம் (ரூ./மாதம்) |
|---|---|---|
| உச்சநேரமல்லாதது (22:30 - 05:30 மணித்தியாலங்கள்) | 13.00 | 540.00 |
| நாள் (05:30 - 18:30 மணித்தியாலங்கள் | 25.00 | 540.00 |
| உச்சம் (18:30 - 22:30 மணித்தியாலங்கள்) | 54.00 | 540.00 |

2015 நவெம்பர் 21 - மண்ணெண்ணெயினுடைய சில்லறை விலையானது ரூ.10 இனால் லீற்றரொன்றிற்கு ரூ.49 இற்கு குறைக்கப்பட்டது.

- 12.5 கி.கி திரவப் பெற்றோலிய வாயு உருளையின் விலை ரூ.150 இனால் ரூ.1,346 இற்கு குறைக்கப்பட்டது.

2016 பெப்புருவரி 01 - உள்நாட்டு அழைப்புக்கள் மற்றும் குறுந்தகவல் பணிகள்/ பல்லூடகத் தகவல் பணிகள் என்பவற்றுக்கான தாழ்ந்தமட்ட பெறுமதியானது பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது.

| வகை | நிமிடமொன்றிற்கான தாழ்ந்தமட்ட பெறுமதி (ரூபா.) |
|---|---|
| உள்நாட்டு அழைப்பு (நிமிடமொன்றுக்கான பட்டியல் அடிப்படையில்) | 1.50 |
| உள்நாட்டு அழைப்பு (செக்கனொன்றுக்கான பட்டியல் அடிப்படையில்) | 1.80 |
| குறுந்தகவல் பணிகள்/பல்லூடகத் தகவல் பணிகள் | 0.20 (தகவல் ஒன்றுக்கு) |

## வெளிநாட்டுத் துறை

**வர்த்தகமும் தீர்வையும்**

2015 சனவரி 01 - பெரிய வெங்காய இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.50 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.10 இற்கு நான்கு மாத காலத்திற்குக் குறைக்கப்பட்டது.

2015 சனவரி 22 - அரிசி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.1 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.20 இற்கு நான்கு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

2015 சனவரி 30 - 1,000 சி.சி இற்கு குறைவான உந்து ஊர்திகளின் மீதான உற்பத்தி (சிறப்பு ஏற்பாடு) தீர்வையானது கீழ் நோக்கி திருத்தப்பட்டதுடன் கலப்பு உந்து ஊர்திகள் மீதான உற்பத்தித் தீர்வையானது மேல் நோக்கித் திருத்தப்பட்டது.

- போற்லான்ட் சீமெந்து மற்றும் ஓரளவு நிறைவுசெய்யப்பட்ட இரும்பு உற்பத்திகள் அல்லது கலப்பல்லா உருக்கு என்பவற்றின் இறக்குமதி சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

- கோதுமை தானிய இறக்குமதி மீதான முழு சுங்கத் தீர்வை விலக்கானது 15 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ.10 ஆக வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | - | பின்வரும் உணவு வகைகளின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது ஆறு மாத காலத்திற்குக் குறைக்கப்பட்டது. |
| | | - மாசிக் கருவாடு கி.கி ஒன்றிற்கு ரூ.302 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.102 இற்கு |
| | | - நெத்தலிக் கருவாடு கி.கி ஒன்றிற்கு ரூ.26 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.11 இற்கு |
| | | - பாசிப் பயறு கி.கி ஒன்றிற்கு ரூ.40 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.10 இற்கு |
| | | - உழுந்து கி.கி ஒன்றிற்கு ரூ.110 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.60 இற்கு |
| | | - மிளகாய் (தூளாக்கப்பட்டது அல்லது அரைக்கப்பட்டது) கி.கி ஒன்றிற்கு ரூ.150 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.125 இற்கு |
| | | - கொத்தமல்லி கி.கி ஒன்றிற்கு ரூ.46 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.26 இற்கு |
| | | - கொத்தமல்லி (தூளாக்கப்பட்டது அல்லது அரைக்கப்பட்டது) கி.கி ஒன்றிற்கு ரூ.202 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.52 இற்கு |
| | | - மஞ்சள் (தூளாக்கப்பட்டது அல்லது அரைக்கப்படாதவை) கி.கி ஒன்றிற்கு ரூ.202 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.102 இற்கு |
| | | - மஞ்சள் (ஏனையவை) கி.கி ஒன்றிற்கு ரூ.510 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.360 இற்கு |
| | | - உழுத்தமா கி.கி ஒன்றிற்கு ரூ.300 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.200 இற்கு |
| | | - தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் கி.கி ஒன்றிற்கு ரூ.102 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.50 இற்கு |
| | | - சீனி கி.கி ஒன்றிற்கு ரூ.28 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.18 இற்கு |
| 2015 பெப்புருவரி 09 | - | கோதுமை தானிய இறக்குமதி மீதான முழு சுங்கத் தீர்வை விலக்கானது 15 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ.10 ஆக வழங்கப்பட்டு கி.கி ஒன்றிற்கு ரூ.4 ஆகக் குறைக்கப்பட்டது. ஆகவே பிரயோகிக்கக் கூடிய தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.6 ஆகும். |
| 2015 பெப்புருவரி 15 | - | உருளைக்கிழங்கின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.10 இலிருந்து ரூ.40 இற்கு நான்கு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | மெக்கரல் எனும் மீன் இறக்குமதி மீதான ரூ.10 என்ற சிறப்புப் பண்டத் தீர்வை நான்கு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2015 பெப்புருவரி 25 | - | பட்டாணி, கொண்டைக்கடலை, தடடைப்பயறு, மைசூர் பருப்பு, மஞ்சள் பருப்பு, குரக்கன், வரகு மற்றும் மாஜரீன் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| | - | சோளம் மற்றும் இறுங்கு இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது இரத்துச் செய்யப்பட்டது. |
| 2015 பெப்புருவரி 27 | - | முக்கியமாக, மக்களின் போக்குவரத்திற்காக உருவமைக்கப்பட்ட உந்து ஊர்திகள் மற்றும் ஏனைய உந்தூர்திகளின் இறக்குமதிக்கான வயதெல்லையானது அதிகரிக்கப்பட்டது. |
| 2015 மாச்சு 18 | - | மெக்கரல் எனும் மீனின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.10 இலிருந்து ரூ.6 இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது. |
| 2015 மாச்சு 26 | - | அரிசியின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.20 இலிருந்து ரூ.40 இற்கு நான்கு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2015 ஏப்பிறல் 02 | - | உடன் அல்லது குளிரூட்டப்பட்ட மீன், கருவாடு, யோகா்ட், வெண்ணெய்க்கட்டி, பாற் பரவப்பொருட்கள், சின்ன வெங்காயம், உள்ளி, உடன் தோடம்பழம், திராட்சைப்பழம், ஆப்பிள், நற்சீரகம், பெருச்சீரகம், வெந்தயம், குரக்கன் மா, கோதுடனான நிலக்கடலை, கடுகு, மரக்கறி எண்ணெய் மற்றும் உப்பு போன்றவற்றின் இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2015 ஏப்பிறல் 24 | - | உருளைக்கிழங்குகளின் இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.40 இலிருந்து ரூ.55 இற்கு நான்கு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | பெரிய வெங்காயங்களின் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.10 இலிருந்து ரூ.30 இற்கு நான்கு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2015 மே 06 | - | கி.கி ஒன்றிற்கு ரூ.40 எனும் அரிசி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வைக்குப் பதிலாக கி.கி ஒன்றிற்கு ரூ.35 ஆன சுங்கத்தீர்வை, 11 சதவீத பெறுமதி சேர் வரி, 5 சதவீத துறைமுக மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தி தீர்வை மற்றும் 2 சதவீத தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ஆகியன விதிக்கப்பட்டது. |
| 2015 யூன் 06 | - | உருளைக்கிழங்குகளின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.55 இலிருந்து ரூ.30 இற்கு மூன்று மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது. |
| | - | பெரிய வெங்காயங்களின் இறக்குமதிகள் மீதான சிறப்புத் பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.30 இலிருந்து ரூ.10 இற்கு மூன்று மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது. |
| 2015 யூன் 17 | - | மைசூர் பருப்பின் (உடைந்த சிவப்பு மற்றும் உடைத்த மஞ்சள்) இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.5 இலிருந்து ரூ.0.25 இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது. |
| | - | சோயா- அவரை, தாவர மற்றும் சூரிய காந்தி போன்றவற்றின் மசகு எண்ணெயின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.90 இலிருந்து ரூ.105 இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | ஏனைய மரக்கறி எண்ணெயின் இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்டத்தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2015 யூன் 29 | - | சோளம் மற்றும் இறுங்கு வகைகளின் இறக்குமதி மீதான 10 சதவீத சிறப்புப் பண்டத் தீர்வை நான்கு மாத காலப்பகுதிக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2015 யூலை 21 | - | சோயா - அவரை, தாவர மற்றும் சூரியகாந்தி போன்றவற்றின் மசகு எண்ணெயின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.105 இலிருந்து ரூ.90 இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு குறைக்கப்பட்டது. |
| | - | மாசிக்கருவாடு, நெத்தலிக்கருவாடு, பாசிப்பயறு, உழுந்து, மிளகாய், கொத்தமல்லி, மஞ்சள், உழுந்துமா, மசகு எண்ணெய் தவிர்ந்த மரக்கறி எண்ணெய் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் மற்றும் சீனி ஆகியவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2015 யூலை 23 | - | பால் மா இறக்குமதி மீது வழங்கப்பட்ட தீர்வை விலக்கானது கி.கி ஒன்றிற்கு ரூ.90 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.45 ஆகக் குறைக்கப்பட்டது. ஆகவே, பிரயோகிக்கக்கூடிய தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.180 ஆகும். |
| 2015 ஓகத்து 06 | - | பால் மா இறக்குமதி மீதான சுங்கத் தீர்வையானது 25 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ.225 இலிருந்து 20 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ.225 ஆகக் குறைக்கப்பட்டதுடன் பால் மா இறக்குமதி மீது வழங்கப்பட்ட சுங்கத் தீர்வை விலக்கானது மீளப் பெறப்பட்டது. |
| 2015 செத்தெம்பர் 08 | - | உருளைக்கிழங்குகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.40 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.30 இற்கு ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | சீனி இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.18 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.30 ஆக ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | - | பெரிய வெங்காயம், பட்டாணி, கொண்டைக்கடலை, தட்டைப்பயறு, மைசூர் பருப்பு (உடைத்த சிவப்பு மற்றும் மஞ்சள் முழுதாக) வரகு, குரக்கன், மாஜரின் மற்றும் சீனி ஆகியவற்றின் இறக்குமதிகள் மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2015 செத்தெம்பர் 18 | - | மெக்கரல் எனும் மீனின் இறக்குமதி மீதான கி.கி ஒன்றிற்கு ரூ.6 என்ற சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு நீடிக்கப்பட்டது. |
| 2015 செத்தெம்பர் 22 | - | பெரிய வெங்காய இறக்குமதி மீதான மேலதிக கட்டணம் கி.கி ஒன்றிற்கு ரூ.20 ஆக 2015 ஒத்தோபர் 08 வரை அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2015 செத்தெம்பர் 23 | - | பின்வரும் பொருட்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை ஆறு மாத காலப்பகுதிக்கு அதிகரிக்கப்பட்டது.<br>- சோயா - அவரை எண்ணெய், தாவர எண்ணெய், மற்றும் சூரிய காந்தி எண்ணெயும் அவற்றின் பகுதிகளும், சுத்தமாக்கப்பட்ட அல்லது சுத்தமாக்கப்படாதவை எனினும் இரசாயன முறையில் மாற்றப்படாதவை.<br>- தேங்காய் (கொப்பரா), தாவர வித்தகவிழையம் அல்லது பாப்பஸ்சு எண்ணெயும் அவற்றின் பகுதிகள் சுத்தமாக்கப்பட்டவை அல்லது சுத்தமாக்கப்படாதவை ஆனால் இரசாயன முறையில் மாற்றப்படாதவை. |
| 2015 ஒத்தோபர் 02 | - | உடன் அல்லது குளிரூட்டப்பட்ட மீன், கருவாடு, யோகட், வெண்ணெய்க்கட்டி, பாற் பரவற்பொருட்கள், சின்னவெங்காயம், உள்ளி, உடன் தோடம்பழம், திராட்சைப்பழம், ஆப்பிள், நற்சீரகம், பெருஞ்சீரகம், வெந்தயம், குரக்கன் மா, கோதுடனான நிலக்கடலை, கடுகு, மரக்கறி எண்ணெய் மற்றும் உப்பு மீதான சிறப்பு பண்டத் தீர்வை ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| 2015 ஒத்தோபர் 09 | - | பெரிய வெங்காய இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.10 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.30 ஆக நான்கு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2015 ஒத்தோபர் 19 | - | சுங்கத்தின் கொடுப்பனவு நேரத்தில் உற்பத்தித் தீர்வை கணிக்கும் நோக்கத்திற்காக உந்து ஊர்தியின் சுங்க பெறுமதியினை கணிக்கும் முறையானது திருத்தப்பட்டது. |
| 2015 ஒத்தோபர் 29 | - | சோளம் மற்றும் இறுங்கு இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வையானது 10 சதவீதமாக மூன்று மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| | - | மரக்கறி கொழுப்புக்கள் மற்றும் எண்ணெய்கள் மற்றும் அவற்றின் பகுதிகளின் இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.175 ஆக மூன்று மாத காலத்திற்கு அமுல்படுத்தப்பட்டது. |
| 2015 நவெம்பர் 21 | - | உடன் அல்லது குளிரூட்டப்பட்ட மீன் மற்றும் பதனிடப்பட்ட மீன் என்பவற்றின் இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வையானது 10 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ.10 இல் பெரிய பெறுமதியிலிருந்து 10 சதவீதம் அல்லது கி.கி ஒன்றிற்கு ரூ.50 இல் பெரிய பெறுமதிக்கு ஆறு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.40 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.15 ஆக ஆறு மாத காலத்திற்கு குறைக்கப்பட்டது. |
| | - | பெரிய வெங்காய இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.30 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.5 ஆக ஆறு மாத காலத்திற்கு குறைக்கப்பட்டது. |
| | - | சிவப்பு மற்றும் மஞ்சள் (முழு) பருப்புக்களின் இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் திர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.2 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.0.25 ஆக ஆறு மாத காலத்திற்கு குறைக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | - | சிவப்பு மற்றும் மஞ்சள் (உடைத்த) பருப்புக்களின் இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.0.25 ஆக ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| | - | உடன் மற்றும் உலர்ந்த திராட்சை இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.60 ஆக ஆறு மாத காலத்திற்கு அமுல்படுத்தப்பட்டது. |
| | - | பூச்சியம், 7.5 சதவீதம், 15 சதவீதம் மற்றும் 25 சதவீதம் என்ற நான்கு கட்ட அங்க வரித் தீர்வைக் கட்டமைப்பிற்கு பதிலாக பூச்சியம், 15 சதவீதம் மற்றும் 30 சதவீதம் என்ற மூன்று கட்ட தீர்வைக் கட்டமைப்பானது அறிமுகப்படுத்தப்பட்டது. |
| | - | குடிவகை, 20 அங்குலத்திற்கு மேற்பட்ட வளையல் அளவுடைய ரயர்கள் மற்றும் சாக்லெட் கட்டிகள் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வையானது அதிகரிக்கப்பட்டது. |
| | - | ஆடைகள், காலணிகள், ஓடுகள், இரும்புகள், இசைக்கருவிகள் மற்றும் சோளம் (பொத்தி) இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை குறைக்கப்பட்டது. |
| 2016 சனவரி 21 | - | மாசிக் கருவாடு, நெத்தலிக் கருவாடு, பச்சைப்பயறு, உழுந்து, மிளகாய், கொத்தமல்லி, மஞ்சள், உழுத்தம்மா மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வை ஆறு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. |
| 2016 சனவரி 29 | - | சோளம் மற்றும் இறுங்கு இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வை 10 சதவீதமானது 2016 பெப்புருவரி 29 வரை நீடிக்கப்பட்டது. |
| | - | மரக்கறிக் கொழுப்புக்கள் மற்றும் எண்ணெய்கள் மற்றும் அவற்றின் பகுதிகள் இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.175 ஆனது 2016 ஏப்பிறல் 28 வரை நீடிக்கப்பட்டது. |
| 2016 பெப்புருவரி 01 | - | அரிசி இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை கி.கி ஒன்றிற்கு ரூ.35 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.50 ஆக அதிகரிக்கப்பட்டது. |
| 2016 மாச்சு 01 | - | உருளைக்கிழங்கு இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.15 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.35 வரை நான்கு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | பெரிய வெங்காயம் இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வையானது கி.கி ஒன்றிற்கு ரூ.5 இலிருந்து கி.கி ஒன்றிற்கு ரூ.25 வரை நான்கு மாத காலத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2016 மாச்சு 08 | - | மெக்கரல் எனும் மீன், பட்டாணி, கொண்டைக்கடலை, தட்டைப்பயறு, குரக்கன், மாஜரின், சீனி மற்றும் மரக்கறி எண்ணெய் இறக்குமதி மீதான சிறப்பு பண்டத் தீர்வையானது நான்கு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. (இதுவரை வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை) |

**வெளிநாட்டு செலாவணி முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| 2015 நவெம்பர் 01 | - | குடியேறும் சந்தர்ப்பத்தில் புலம்பெயர்பவர்களினால் நாட்டிலிருந்து எடுத்துச் செல்ல விடுவிக்கப்படும் அனைத்து வெளிநாட்டு செலாவணியின் மீது 20 சதவீத புலம்பெயர்தல் வரி விதிக்கப்பட்டது. |
| 2015 திசெம்பர் 29 | - | வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, இலங்கையரல்லா வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வெளிநாட்டு செலாவணி உழைப்போர் கணக்குகளை வைத்திருக்கும் இலங்கையில் வதியும் நபர்களுக்கு, இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட பிணையங்களை பெற்றுக் கொள்ளல், வைத்திருத்தல் மற்றும் பரிமாற்றல், மூலதன தன்மையான வேறு ஏதேனும் சொத்துக்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் அத்தகைய கணக்கு நிதியங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நடைமுறைக் கணக்கின் (மூலதனமல்லாத) கொடுக்கல்வாங்கல்களின் தொடர்பான கொடுப்பனவுகளை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. |

| | |
|---|---|
| | - மேற்குறிப்பிட்டவாறு பிணையங்களை பெற்றுக்கொள்ளல், வைத்திருத்தல் மற்றும் பரிமாற்றல் மற்றும் மூலதனத் தன்மையுடைய வேறு ஏதேனும் சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் இலங்கையில் வதியும் நபர்களிற்கு இலங்கை மத்திய வங்கிக்கு அறிவித்தல் வேண்டும் எனும் தேவைப்பாட்டின் பிரயோகத்திலிருந்து விலக்களிப்பு வழங்கப்பட்டது. |
| 2016 சனவரி 20 | - மேற்கூறப்பட்ட தளர்வுகளுடன் தொடர்புடைய வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, இலங்கையரல்லா வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வெளிநாட்டு செலாவணி உழைப்போர் கணக்கினை வைத்திருப்போருக்கு அத்தகைய கணக்குகளின் நிதியங்களை அனுமதியின்றி ஏதேனும் நோக்கத்திற்காக இலங்கைக்கு வெளியே அனுப்புவதனை அனுமதிக்கும் அறிவுறுத்தல்கள் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு வழங்கப்பட்டது. |
| **அடுத்து வருபவை** | - புதிய வெளிநாட்டு செலாவணி முகாமைத்துவ கொள்கையை அமுல்படுத்தல் |
| | - உத்தரவாதம் மற்றும் வெளிநாட்டு கம்பனிகளினால் வரையறுக்கப்பட்ட ஏனைய கம்பனிகள் தவிர்ந்த இலங்கையில் பதியப்பட்ட எந்தவொரு கம்பனியும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடனைப் பெறுவதனை அனுமதிக்கும் புதிய கடன்படுகை திட்டமொன்று அறிமுகப்படுத்தல். |
| | - இலங்கைக்கு வெளியே வதிவோர்களினால் பரந்துபட்ட எல்லைகள் மற்றும் இலங்கையில் முதலீடுகளிற்கான பகுதிகளினூடாக அரசாங்க கொள்கைகளுடன் தொடர்புடைய உள்ளார்ந்த முதலீட்டு முறைமைகளை அடைதல். |
| | - குடிபெயர்ந்தோரின் நடைமுறை வருமானம் மற்றும் ஓய்வூதிய நன்மைகளின் வெளிநோக்கிய அனுப்புகைக்கான பொது அனுமதி வழங்கப்படுதல். |

**இறைத் துறை**

அரச அரசிறை

| | |
|---|---|
| 2015 சனவரி 01 | - பெறுமதிசேர் வரியின் வீதமானது 12 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. |
| | - குறிப்பிட்ட துறைமுகத்தில் பிரத்தியேகமாகப் பயன்படுத்துவதற்கென இலங்கை துறைமுக அதிகாரசபையினால் இறக்குமதி செய்யப்படும் இயந்திரம், உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பனவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்டன. |
| | - பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பனவற்றிலிருந்தான விலக்களிப்பின் மாதிரிப் பெறுமதி வரையறையானது ரூ.25,000 இலிருந்து ரூ.50,000 இற்கு விரிவாக்கப்பட்டது. |
| | - மொத்த விற்பனை அல்லது சில்லறை வர்த்தகத்தின் மீதான பெறுமதிசேர் வரிக்கு ஏற்புடைத்தான காலாண்டு புரள்வானது ரூ.250 மில்லியனிலிருந்து ரூ.100 மில்லியனுக்குக் குறைக்கப்பட்டது. |
| | - பெறுமதிசேர் வரியின் நோக்கங்களுக்காக பதிவு செய்வதற்கான கடப்பாட்டு வழங்கல்களின் உச்சளவானது ஆண்டொன்றிற்கு ரூ.12 மில்லியனிலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ.15 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் கடப்பாட்டுப் புரள்வின் உச்சளவானது காலாண்டொன்றிற்கு ரூ.3 மில்லியனிலிருந்து காலாண்டொன்றிற்கு ரூ.3.75 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - பந்தய பணயதொழிலர் அல்லது சூதாட்ட வியாபாரத்திலிருந்து மீளப்பெறப்படும் மொத்த தொகையின் மொத்தச் சேகரிப்பின் மீது பிரயோகிக்கத்தக்க பந்தயம் மற்றும் சூதாட்ட தீர்வையானது 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - ஒரு கசினோ களியாட்ட இடத்தில் நுழையும் ஒவ்வொரு நபரின் மீதும் அனுமதிக் கட்டணமாக ஐ.அ.டொலர் 100 அறிமுகப்படுத்தப்பட்டது. |

| | |
|---|---|
| 2015 ஏப்பிறல் 01 | - பின்வரும் நபர்களின்/ நிறுவனங்களின் இலாபங்கள் மற்றும் வருமானங்கள் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன:<br>- வெளிநாட்டு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டிருக்கும் ஐ.அ.டொலர் வைப்புக்கள் அல்லது ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட பிணையங்களில் 2015 சனவரி 01 இல் அல்லது அதற்குப் பின் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிலிருந்தான கூறுநம்பிக்கைகள்.<br>- எந்தவொரு தகவல் தொழில்நுட்ப/ வெளியிலிருந்து வியாபார முயற்சிகளை பெற்றுக்கொள்ளும் கம்பனி ஆரம்பித்து 2 ஆண்டு காலப்பகுதிக்குள் அத்தகைய கம்பனியின் சிறப்புத் தேவைப்பாடாக வேத்துரிமை மூலம் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுப்பனவுகளிலிருந்தும் கம்பனி, பங்குடமை அல்லது இலங்கைக்கு வெளியிலிருக்கும் அமைப்புக்கள்<br>- நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட கம்பனிப் படுகடன் பிணையத்தில் 2015 சனவரி 01 இல் அல்லது அதற்குப் பின்பு மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள்<br>- சலுகை வருமான வரி வீதங்கள் பின்வருமாறு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:<br>- 1970 களில் உற்பத்தித் தொழிலை ஆரம்பித்த உள்ளூர் உற்பத்தியாளரினால் செலுத்தப்படும் வருமான வரியில் 10 சதவீதக் கழிப்பனவு.<br>- உள்ளூர் சீனி கைத்தொழிலுக்கு 12 சதவீதம் பிரயோகிக்கப்பட்டது.<br>- 12 சதவீத சலுகை வீதத்திற்கு தகுதிபெறும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் ஆண்டுக்கான புரள்வு வரையறை ரூ.500 மில்லியனிலிருந்து ரூ.750 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.<br>- பன்னாட்டு பட/நாடக விழாவில் விருது வென்ற சினிமா அல்லது ஒரு நாடகத்தினை உருவாக்கும் தனிநபரின் படங்களிலிருந்தான அல்லது நாடகங்களிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானங்களின் அரைப்பங்கிற்கு அவ்விருது பெற்ற ஆண்டிலிருந்து 5 ஆண்டிற்கு விலக்களிக்கப்பட்டது<br>- தொழில் வருமானங்களில் குறிப்பிட்ட சில வகைகளுக்குப் பொருத்தமான 16 சதவீத வரி வீதமானது ஏனைய தொழில் வகைகளை உள்ளடக்குவதற்கு விரிவாக்கப்பட்டது<br>- ஐ.அ.டொலர் 2 மில்லியனைவிடக் குறையாததும் ஏற்றுமதி சந்தைக்காக பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபடுவதுமான புதிய தொழில்முயற்சிகளுக்கு ஒடுங்குபாக மீதி முறையிலான தேய்மானப்படி வழங்கப்படுவதுடன் அவ்வாறான இலாபங்களிலிருந்து வழங்கப்படும் பங்கு இலாபங்களுக்கு ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கு விலக்களிக்கப்பட்டது.<br>- மேல் மாகாணத்திற்கு வெளியில் மதுபானம் அல்லது புகையிலை போன்ற பொருட்கள் தவிர்ந்த பொருட்களை உற்பத்தி செய்யும் வியாபாரத்தினை மேற்கொள்ளும் ஏற்கனவேயிருக்கும் தொழில்முயற்சியின் இலாபங்கள் மற்றும் வருமானங்கள் மீது பிரயோகிக்கக்கூடிய வரி வீதமானது சில நிபந்தனைகளிற்குட்பட்டு ரூ.500 மில்லியனை விஞ்சாதவிடத்து 5 ஆண்டு காலத்திற்கு 50 சதவீதத்தினால் குறைக்கப்பட்டது.<br>- ஏதேனும் உற்பத்தி வியாபாரத்தில், ரூ.500 மில்லியனுக்கு விஞ்சிய முதலீட்டுக் கடப்பாட்டுடன் 2015 திசெம்பர் 31இல் அல்லது அதற்கு முன்பு வரி நோக்கத்திற்காக உள்நாட்டு அரசிறைத் திணைக்களத்துடன் பதிவு செய்யப்பட்ட ஏதாவது கம்பனி 7 ஆண்டு காலத்திற்குப் பொருத்தமான வரி வீதத்தில் 50 சதவீதக் குறைப்பிற்கு தகுதியுடையதாகும்.<br>- வட்டித் தொகையினைக் கருத்திற் கொள்ளாது 2.5 சதவீத ஒற்றை பிடித்துவைத்தல் வரி வீதமானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.<br>- மூத்த பிரஜைகளின் வட்டி வருமானமானது பிடித்துவைத்தல் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | - | நியம திறன் அபிவிருத்திப் பயிற்சி வழங்கும் போது பயிலுனர்களுக்கு ஏற்படும் செலவினம் மீது மூன்றாந்தர தொழில்சார் கல்வி ஆணைக்குழுவுடன் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு நபருக்கும் மும்மடங்கு குறைப்பு வழங்கப்பட்டது. |
| | - | தொழில் வருமானத்திலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி மீதான விலக்களிக்கப்பட்ட தொகையானது ரூ.600,000 இலிருந்து ரூ.750,000 இற்கு அதிகரிக்கப்பட்டது மற்றும் உழைக்கும்போதே செலுத்தும் வரி மீதான ஆகக்கூடிய வீதமானது 24 சதவீதத்திலிருந்து 16 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. |
| | - | மொத்த மற்றும் சில்லறை வியாபார மையங்கள், சுற்றுலா விடுதிகள், சுற்றுலா விடுதி மதுபானச்சாலைகள், ஓய்வு இல்லங்கள் போன்றவற்றின் மீதான ஆண்டுக்கான வெறிய உரிமக்கட்டணமானது அதிகரிக்கப்பட்டது. |
| 2015 ஒத்தோபர் 03 | - | சிகரெட்டின் இறக்குமதி மீதான தீர்வையானது (சிறப்பு ஏற்பாடு) அதிகரிக்கப்பட்டது. |
| | - | ஏதேனும் தானிய வகைத் தேறல்கள், பனை, தேங்காய் மற்றும் பதப்படுத்தப்பட்ட சாராயத்திலிருந்தான ஏதேனும் மதுசார உற்பத்தி, உள்நாட்டில் உருவாக்கிய வெளிநாட்டு தேறல் மதுசாரம் மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட மோல்ட் மதுபானம் என்பவற்றின் மீதான கலால் வரி அதிகரிக்கப்பட்டது. |
| 2015 ஒத்தோபர் 30 | - | தவறணை அல்லது மது விற்பனை மையம் ஒன்றிற்கு ஒரே தடவையிலான அறவீடொன்றாக மதுசாலைகள் மற்றும் தவறணைகள் அறவீடாக ரூ.250,000 விதிக்கப்பட்டது. |
| | - | அனைத்து கசினோ தொழிற்பாட்டாளர்கள் மீது ஒரே தடவையிலான தீர்வையொன்றாக கசினோ கைத்தொழில் தீர்வை ரூ.1,000 மில்லியன் விதிக்கப்பட்டது. |
| | - | இலங்கையிலுள்ள அனைத்து உரிமம்பெற்ற செல்லிடத் தொலைபேசி தொழிற்பாட்டாளர்கள் மீது ஒரே தடவையிலான தீர்வையொன்றாக செல்லிடத் தொலைபேசி தொழிற்பாட்டாளர் தீர்வையாக ரூ.250 மில்லியன் விதிக்கப்பட்டது. |
| | - | இலங்கையின் செய்மதி அமைவிடங்களைப் பயன்படுத்தும் செய்மதி உரிமையாளர்கள் மீது ஒரே தடவையிலான தீர்வையொன்றாக செய்மதி அமைவிட தீர்வை ரூ.1,000 மில்லியன் விதிக்கப்பட்டது. |
| | - | நாடளாவிய ரீதியில் 5 இற்கும் மேற்பட்ட அலைகடத்தும் அமைவிடங்களைப் பயன்படுத்தி தொழிற்படுகின்ற அர்ப்பணிக்கப்பட்ட விளையாட்டுக்கள் அலைவரிசைகள் மீது ஒரே தடவையிலான தீர்வையொன்றாக அர்ப்பணிக்கப்பட்ட விளையாட்டுக்கள் அலைவரிசை தீர்வை ரூ.1,000 மில்லியன் அறவிடப்பட்டது. |
| | - | 2000 ஏப்பிறல் 01 இற்குப் பின்னர் நிர்மாணிக்கப்பட்டதும் 10,000 சதுர அடிக்கு மேற்பட்ட வீடுகள் அல்லது ரூ.150 மில்லியனுக்கு குறையாத பெறுமதியுடைய வீடுகளைக் கொண்டிருக்கும் உரிமையாளர்கள் மீது ஆண்டு அடிப்படையில் மாளிகை வரி ரூ. 1 மில்லியன் விதிக்கப்பட்டது. |
| | - | ரூ. 2,000 மில்லியனை விஞ்சுகின்ற இலாபத்தினைக் கொண்ட எவரேனும் தனிநபர், ஏதேனும் கம்பனி அல்லது கம்பனிகளின் குழுமம் என்பவற்றிற்கான 2013/2014 வரி மதிப்பீட்டு ஆண்டுக்கான அதிஊட்ட வரி 25 சதவீதமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 2015 நவெம்பர் 21 | - | தேறல்கள், பனை, தேங்காய் மற்றும் பதப்படுத்தப்பட்ட சாராயத்திலிருந்தான மதுபான உற்பத்தி, உள்நாட்டில் உருவாக்கிய வெளிநாட்டு தேறல் மதுசாரம் மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட 5 சதவீதம் மற்றும் மோல்ட் மதுபானம் என்பனவற்றின் மீதான கலால் தீர்வையானது மேல்நோக்கித் திருத்தப்பட்டது. |
| | - | ஆகக்கூடிய முழுச்செறிவு 5 சதவீதத்திற்கு குறைவான மோல்ட் மதுபானம் மீதான கலால் தீர்வை வீதமானது லீற்றர் ஒன்றிற்கு ரூ.190 இலிருந்து 160 இற்கு குறைக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | - | நீளத்தில் 72 மி.மீற்றரிற்கு மேற்பட்ட ஆனால் 84 மி.மீற்றரிற்கு மேற்படாத நீளமுடைய சிகரெட் மற்றும் 84 மி.மீற்றரிற்கு மேற்பட்ட நீளமுடைய சிகரெட் என்பவற்றின் மீதான கலால் தீர்வையானது அதிகரிக்கப்பட்டது. |
| | - | உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வை (சிறப்பு ஏற்பாடு) திருத்தப்பட்டதுடன் கன சென்ரிமீற்றர் அடிப்படையிலான வாகனங்களின் கலால் தீர்வையின் சாதாரண அலகு வீதமானது அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2015 நவெம்பர் 25 | - | இறக்குமதி செய்யப்பட்ட ஆபரணங்கள் மீது 10 சதவீத செஸ் தீர்வை விதிக்கப்பட்டது. |
| 2015 திசெம்பர் 05 | - | ஆகக்கூடிய முழுச்செறிவு 5 சதவீதத்திற்கு குறைவான மோல்ட் மதுபானம் மீதான கலால் தீர்வையானது லீற்றர் ஒன்றிற்கு ரூ.160 இலிருந்து ரூ.190 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2015 திசெம்பர் 10 | - | வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதி மீதான செஸ் தீர்வையானது அகற்றப்பட்டது. |
| 2015 திசெம்பர் 13 | - | பீடி இலைகள், திண்மையான சீமெந்துக்கள், வார்ப்பு ஆலை அச்சுக்கள் பத்திரங்கள் (மோல்ட்கள்) மற்றும் அச்சுக்கள் (கோர்கள்) நீரை அடிப்படையாகக் கொண்ட ஓரினப் பல்பகுதியங்கள் மற்றும் சகபல்பகுதியங்கள், துணிக்கை அட்டைகள், அட்டைப் படைகளாக்கப்பட்ட தரத்திலான அட்டைகள் மற்றும் அதே போன்ற அட்டைகள், மென்பட்டுத்துகிலாடை வகைகள் வேறு வலைத்துணிகளும் மற்றும் குளிரூட்டிகளுக்கான நிலைப்பெட்டிகள் என்பவற்றின் இறக்குமதி மீதான செஸ் தீர்வை குறைக்கப்பட்டது. |
| | - | மசகுகள், வினைல் அசற்றேற்றின் பல்பகுதியங்கள், முதன்மை வடிவங்களிலான அக்றைட் பல்பகுதியங்கள் நீர்புகாத பாதணி மற்றும் ஏனைய பாதணிகளின் இறக்குமதி மீதான செஸ் தீர்வை அதிகரிக்கபட்டது. |
| 2015 திசெம்பர் 15 | - | மதுபான உற்பத்தி மற்றும் வடிசாலைகள் மீதான ஆண்டுக்கான உரிமக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. |
| 2015 திசெம்பர் 31 | - | நட்சத்திர வகுப்பு சுற்றுலா விடுதிகள், விற்பனைக்கூட சுற்றுலா விடுதிகள், விற்பனைக்கூட வில்லாக்கள் மற்றும் மரபுரிமை சுற்றுலா விடுதிகள் மீதான மதுசாரப் பாவனை தொடர்பாக அறவீடு செய்யப்படும் மூன்றாண்டுக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. |
| 2016 சனவரி 01 | - | உந்து ஊர்திகளின் இறக்குமதி மற்றும் விற்பனை வியாபாரத்தில் ஈடுபடும் அனைத்து இறக்குமதியாளர்கள் மீதும் இறக்குமதி உரிமக் கட்டணமாக ஆண்டுக்கு ரூ.1.5 மில்லியன் விதிக்கப்பட்டது. |
| | - | போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளின் மீதான தீர்வையானது லீற்றரொன்றிற்கு ரூ.10 இலிருந்து லீற்றரொன்றிற்கு ரூ.30 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | கடனட்டையின் உள்நாட்டுப் பயன்பாட்டுடன் தொடர்பிலான கடனட்டை பயன்பாட்டின் மீது அறவிடப்பட்ட 1.5 சதவீத முத்திரைத் தீர்வையானது நீக்கப்பட்டது. |
| | - | வெளிநாட்டு கொள்வனவுகளுக்கான கடனட்டைப் பயன்பாட்டின் மீதான முத்திரைத் தீர்வையானது 2.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| | - | எந்தவொரு கம்பனியினதும் எந்தவொரு எண்ணிக்கையிலான பங்குகளின் வழங்கல், மாற்றல் அல்லது ஒப்படைப்பு என்பவற்றின் விளைவாக ஏதேனும் பங்குச் சான்றிதழ் மீதான முத்திரைத் தீர்வை நீக்கப்பட்டது. |
| | - | புறப்படுகைத் தீர்வை பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது.<br>- இலங்கையிலிருந்து விமானத்தால் வெளிச்செல்லும் ஒருவருக்கு ஐ.அ.டொலர் 25 இலிருந்து ஐ.அ.டொலர் 30 இற்கு.<br>- இலங்கையிலிருந்து கப்பலால் வெளிச்செல்லும் ஒருவருக்கு ஐ.அ.டொலர் 5 இலிருந்து ஐ.அ.டொலர் 30 இற்கு. |
| | - | கடவுச் சீட்டு மற்றும் இரட்டை குடியிருமைக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. |

- துறைமுக மற்றும் விமானநிலைய தீர்வை வீதமானது 5 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.
- வாகன உரித்து தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டது.
- வெளிநாட்டினருக்கு நிலத்தினை குத்தகைக்கு விடுவது மீது விதிக்கப்பட்ட வரி அகற்றப்பட்டது.
- கட்டிடக் கைத்தொழில் பிணைய நிதியத் தீர்வையானது அகற்றப்பட்டது.
- சர்வதேச தொலைத் தொடர்பூட்டல் தொழிற்பாட்டாளர்கள் தீர்வையின் வீதமானது ஐ.அ.டொலர் 12 சதத்திலிருந்து ஐ.அ.டொலர் 9 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.
- இலத்திரனியல் மற்றும் மின்சார கருவிகள் மீதான துறைமுக மற்றும் விமானநிலைய தீர்வையானது 2.5 சதவீதத்திற்கு விதிக்கப்பட்டது.
- கட்டிடக் கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் துறைமுக மற்றும் விமானநிலைய தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

**அரச செலவினம்**

2015 சனவரி 01 - வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 29 திகதியிடப்பட்ட திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் சுற்றறிக்கை இல. 2014/14 ஊடாக ஆகக்கூடிய சமுர்த்தி மானியத் தொகையானது மாதமொன்றுக்கு ரூ.1,500 இலிருந்து ரூ.3,000 ஆக அதிகரிக்கப்பட்டது.

2015 பெப்புருவரி 01 - அரச ஊழியர்களுக்கான சம்பளம் ரூ.7,000 இனால் அதிகரிக்கப்பட்டது. இதில் ரூ.5,000 பெப்புருவரியில் வழங்கப்பட்டதுடன் மிகுதி 2015 யூனில் வழங்கப்பட்டது.

2015 ஏப்பிறல் 01 - ஓய்வுபெற்றவர்களுக்கு செலுத்தப்பட்ட மாதாந்த இடைக்காலப் படியானது மாதமொன்றிற்கு ரூ.1000 இனால் ரூ.3,500 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2015 ஏப்பிறல் 30 - சமுர்த்தி மானியத் தொகையின் ஆகக்கூடிய தொகையானது மாதமொன்றிற்கு ரூ.3,000 இலிருந்து ரூ.3,500 இற்கு அதிகரிக்கப்பட்டது.

2015 யூலை 01 - பொதுப்பணி அலுவலர்களின் சம்பளத்தினை மீளதிருத்துவதற்காக வெளியிடப்பட்ட 2006 ஏப்பிறல் 25 திகதியிடப்பட்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 06/2006 மற்றும் 2007 ஓகத்து 24 திகதியிடப்பட்ட சுற்றறிக்கை இல. 06/2006 (IV) என்பவை அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் ஓய்வு பெற்ற பொதுப்பணி அலுவலர்களின் ஓய்வூதியம் மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் சம்பள மீள்திருத்தத்தின் அடிப்படையில் மீண்டும் மீள் திருத்தப்பட்டது.

- பொதுத்துறையில் நிறைவேற்றுப்பணி வகையிலுள்ள அலுவலர்களுக்கு ஒரு சிறப்புப்படி பின்வருமாறு வழங்கப்பட்டது.

| வகை | மாதாந்த படி (ரூ.) |
|---|---|
| 06 ஆண்டுகளைவிட குறைந்த செயற்படு பணிக்காலம் | 3,000 |
| 06 ஆண்டுகள் அல்லது அதற்கு கூடிய ஆண்டுகள் ஆனால் 11 ஆண்டுகளை விட குறைந்த செயற்படு பணிக்காலம் | 5,000 |
| 11 ஆண்டுகள் அல்லது அதற்கு கூடிய ஆண்டுகள் ஆனால் 19 ஆண்டுகளை விட குறைந்த செயற்பாடு பணிக்காலம் | 10,000 |
| 19 ஆண்டுகள் அல்லது அதற்கு கூடிய ஆண்டுகள் செயற்படு பணிக்காலத்தினைக் கொண்டு தரம் 1 அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் | 15,000 |

| | | |
|---|---|---|
| 2016 பெப்புருவரி 25 | - | 2006 ஏப்பிறல் 25 திகதியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல 06/2006 இன் ஏற்பாடுகளினதும் அதே சுற்றறிக்கையின் மீள்திருத்தங்களுக்கான ஏற்பாடுகளினதும் அடிப்படையில் பொதுப்பணி சேவைகளின் பதவிகளுக்காக அமுல்படுத்தப்பட்ட சம்பள அளவீடுகளுக்கு பதிலாக 2016 சனவரி 01 முதல் அமுலுக்கு வரும்வகையில் ஐந்து பகுதிகளாக பொதுப்பணி சேவைகளுக்கான சம்பள அளவீடுகளை அமுல்படுத்துவதற்கு பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 வெளியிடப்பட்டது. |
| **அடுத்து வருபவை** | - | நெற்பயிற்செய்கையாளர்களுக்கான வளமாக்கி மானியமாக வருடமொன்றுக்கு ஹெக்டெயர் ஒன்றுக்கான பணவழங்கலாக ரூபா.25,000 இனை வழங்குதல். |

**படுகடன் முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| 2015 சனவரி 19 | - | 2015 இற்கான இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல் ஐ.அ.டொலர் 1500 மில்லியனான வரையறைக்கு அதிகாரமளிக்கப்பட்டது. |
| 2015 பெப்புருவரி 09 | - | மிதக்கும் வீதத்தில் இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்களுக்கு மேலதிகமாக வேறுபட்ட முதிர்வுகளில் நிலையான வீதங்களில் இலங்கை அபிவிருத்தி முறிகளை வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டது. |
| 2015 யூன் 10 | - | 2015 இற்கான இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கலின் அதிகாரமளிக்கப்பட்ட வரையறையானது ஐ.அ.டொலர் 2500 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2015 ஒத்தோபர் 05 | - | இலங்கை அபிவிருத்தி முறிகளின் இரண்டாந்தரச் சந்தையினை உயர்த்துவதற்கு ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் பத்திரங்களற்ற வர்த்தகம் மற்றும் சட்ட ரீதியான உரிமையினை பதிதல் போன்றவற்றை வசதிப்படுத்துவதற்கு லங்கா தீர்ப்பனவு முறையில் பல்நாணயத் தொழிற்பாடு இயலச்செய்யப்பட்டது. |
| 2015 ஒத்தோபர் 20 | - | திறைசேரி உண்டியல் வழங்கலின் அதிகாரமளிக்கப்பட்ட வரையறையானது ரூ.850 பில்லியனிலிருந்து ரூ.1,250 பில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2015 ஒத்தோபர் 28 | - | முதனிலை வணிகர் கம்பனிகளினால் பேணப்படவேண்டிய குறைந்தபட்ச மைய மூலதனமானது ரூ.300 மில்லியனிலிருந்து ரூ.1,000 மில்லியனுக்கு அதிகரிப்பதன் மூலம் முதனிலை வணிகர்களுக்கான இழிவளவு மைய மூலதன தேவைப்பாடு மீதான அறிவுறுத்தல்கள் மீள் திருத்தப்பட்டது. |
| | - | முதனிலை வணிகர் கம்பனிகளினால் பேணப்படவேண்டிய குறைந்தபட்ச இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதன போதுமாந்தன்மை விகிதம் 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு அதிகரிப்பதன் மூலம் முதனிலை வணிகர்களுக்கான மூலதன போதுமாந்தன்மை விகிதம் மீதான அறிவுறுத்தல்கள் மீள்திருத்தப்பட்டது. |
| 2015 திசெம்பர் 4 | - | திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளிலான வெளிநாட்டவர்களின் முதலீட்டு மட்டம் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் மொத்த வெளிநின்ற இருப்புக்களின் 12.5 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. |

**நாணயத் துறை**

| | | |
|---|---|---|
| 2015 மாச்சு 02 | - | 5.00 சதவீத சிறப்பு துணைநில் வைப்பு வசதி வீதம் புறக்கீடு செய்யப்பட்டது. |
| 2015 ஏப்பிறல் 15 | - | துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பன முறையே 6.00 சதவீதம் மற்றும் 7.50 சதவீதத்திற்கு 50 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டது. |
| 2015 செத்தெம்பர் 03 | - | செலாவணி வீதமானது வெளிநாட்டுச் செலாவணி சந்தையில் நிலவும் கேள்வி மற்றும் வழங்கல்களின் அடிப்படையில் தீர்மானிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2015 திசெம்பர் 30 | - | 2016 சனவரி 16 ஆம் திகதி ஆரம்பமாகின்ற ஒதுக்கு காலத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வர்த்தக வங்கிகளின் மொத்த ரூபா வைப்பு பொறுப்புக்களில் பிரயோகிக்கப்படும் நியதி ஒதுக்கு விகிதம் 1.50 சதவீத புள்ளிகளினால் 6.00 சதவீதத்திலிருந்து 7.50 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2016 பெப்புருவரி 19 | - | துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பன முறையே 6.50 சதவீதம் மற்றும் 8.00 சதவீதத்திற்கு 50 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டது. |

**நிதியியல் துறை**

**உரிமம்பெற்ற வங்கிகள்**

| | | |
|---|---|---|
| 2015 சனவரி 01 | - | இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு திட்டத்தின் கீழ் ஒரு நிறுவனத்தின் ஒரு வைப்பாளருக்கான வைப்புக் காப்புறுதி உள்ளடக்கமானது ரூ.200,000 இலிருந்து ரூ.300,000 இற்கு அதிகரிக்கப்பட்டது. |
| 2015 பெப்புருவரி 01 | - | அரச வங்கியினால் வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்டு 2015 சனவரி 31 அன்றோ அல்லது அதற்கு முன்போ செயற்படாக் கடன்களாக மாற்றம் செய்யப்பட்ட ஆகக் கூடிய ரூ.100,000 மதிப்புள்ள பயிர்ச்செய்கை கடன்களின் மூலதனத்தில் 50 சதவீதமானது தள்ளுபடி செய்யப்பட்டது. |
| 2015 மாச்சு 13 | - | 2015 சனவரி 16 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ரூ.1.0 மில்லியனை விஞ்சாது ஒரு ஆண்டு காலத்திற்கு இலங்கை ரூபாவில் நிலையான வைப்பினைத் திறந்துள்ள மூத்த பிரசைகளின் (60 வயதிற்கு மேற்பட்டோர்) சேமிப்புக்களுக்கு ஒரு ஆண்டிற்கு 15 சதவீத வட்டி வீதமானது வழங்கப்பட்டதுடன் 2015 சனவரி 16 இற்கு முன்னதாக ரூ.2.5 மில்லியன் வரை இலங்கை ரூபாவில் நிலையான வைப்பினை திறந்த மூத்த பிரசைகளுக்கு (60 வயதிற்கு மேற்பட்டோர்) ஆண்டிற்கு 12 சதவீத வட்டி வழங்கப்பட்டது. |
| 2015 மாச்சு 15 | - | 2015 யூன் 30 அன்றோ அல்லது அதற்கு முன்போ அடகு முற்பணங்களை செலுத்துமிடத்து, அரச வங்கிகளால் வழங்கப்பட்டு 2015 சனவரி 31 அன்றோ அல்லது அதற்கு முன்போ செயற்படாக் கடன் வகைக்கு மாற்றல் செய்யப்பட்ட ரூ.200,000 இனை விஞ்சாது அடகு வைக்கப்பட்ட நகைகளுக்கான முற்பணம் மீதான 12 சதவீதத்தினை விஞ்சும் வட்டிக் கொடுப்பனவுகள் தளர்த்தப்பட்டன. |
| 2015 மாச்சு 31 | - | 2015 ஏப்பிறல் 01 இலிருந்து பாசல் III திரவத்தன்மை நியதிகளின் கீழான திரவ உள்ளடக்க விகிதத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு உரிமமளிக்கப்பட்ட வங்கிகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2015 ஏப்பிறல் 15 | - | 2015 இற்கான இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிட்டவாறு வங்கித் தொழிலிற்கான கிடைப்பனவை விரிவுபடுத்துவதற்கு உரிமம் பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கும் சுற்றறிக்கையொன்று வழங்கப்பட்டது. |
| 2015 யூன் 01 | - | ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட வசதிகளின் மீதான அதிகரித்த வட்டியின் அறவீடானது மீள் விதிக்கப்பட்டது. பிரயோகிக்கத்தக்க அதிகரித்த வட்டி வீதமானது 1000 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 500 அடிப்படைப் புள்ளிகளுக்கு குறைக்கப்பட்டது. ஏற்றுமதிகளை கப்பலேற்றிய திகதியிலிருந்து 90 நாட்கள் அல்லது 120 நாட்களுக்குள் (எது பொருத்தமானதோ) ஏற்றுமதி கொடுகடனை ஏற்றுமதி வருவாய்களிலிருந்து தீர்ப்பனவு செய்யவில்லை எனில் இந்த அதிகரித்த வட்டியானது அறவிடப்படும். மேலும், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளானது அவர்களது விருப்பத்திற்கேற்ப, நிபந்தனைகளுக்கு உட்பட்டு தேயிலை ஏற்றுமதி தொடர்பில் ஏற்றுமதி வருவாய்களைக் கொண்டு ஏற்றுமதி கொடுகடன் தீர்ப்பதற்கான காலத்தினை கப்பலேற்றப்பட்ட திகதியிலிருந்து 180 நாட்கள் வரை விரிவுபடுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2015 யூலை 28 | - | பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியின் கொடுக்கல் வாங்கல்கள் பெறுமதி மற்றும் கட்டணங்களின் உயர்ந்தபட்ச வரையறை மீதான 2015ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் சுற்றறிக்கையானது பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆழியினூடாக நடைமுறைப்படுத்தப்படும் கொடுக்கல் வாங்கல்கள் மீதான ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் கணக்குமான உயர்ந்தபட்ச பெறுமதி வரையறை மற்றும் விதிக்கக்கூடிய உயர்ந்தபட்ச கட்டணங்களை அறவிடுவதற்காக வழங்கப்பட்டது. |
| 2015 ஓகத்து 06 | - | இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையூடாக மேற்கொள்ளப்படும் நிதிய மாற்றங்களுக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிடப்படக்கூடிய உயர்ந்தபட்ச கொடுக்கல்வாங்கல் கட்டணத்தை விதிக்கும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் கொடுக்கல்வாங்கல், கட்டணத்தின் மீதான உச்சபட்ட எல்லைகள் தொடர்பில் 2015 ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு சுற்றறிக்கை விதிக்கப்பட்டது. |
| 2015 ஓகத்து 07 | - | அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையினூடாக மேற்கொள்ளப்படும் நிதிய மாற்றங்களுக்கான உயர்ந்தபட்ச கொடுக்கல்வாங்கல் கட்டணத்தை விதிப்பதற்காகவும் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைமையின் தொழிற்படுத்துநராக இலங்கை மத்திய வங்கியினால் அறவிடப்படும் கட்டணத்தைக் குறைப்பதற்காகவும் லங்கா செட்டில் முறைமையின் தொழிற்படுத்துநர் கட்டணம் மற்றும் கொடுக்கல் வாங்கல் கட்டணங்களின் உயர்ந்தபட்ச எல்லைகள் தொடர்பில் 2015ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு சுற்றறிக்கை விடுக்கப்பட்டது. |
| 2015 செத்தெம்பர் 14 | - | 2015 செத்தெம்பர் 15 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில், உந்து ஊர்திகளின் கொள்வனவு செய்தல் அல்லது பாவனை நோக்கத்திற்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் மற்றும் கடன்கள் மீதான அதிகூடிய கடன் பெறுமதியில் 70 சதவீத விகிதத்திற்கு பேணுவதற்கு உரிமமளிக்கப்பட்ட வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கம்பனிகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2015 ஒத்தோபர் 29 | - | அதிகூடிய கடன் பெறுமதியில் 70 சதவீத விகிதத்திற்கு ஏற்புடைய 2015 திசெம்பர் 01 இலிருந்து நிர்ணயமாக நடைமுறைக்குவரும் என்பதனை அறிவிப்பதற்கு உரிமமளிக்கப்பட்ட வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகள் போன்றவற்றிற்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டன. |
| 2015 ஒத்தோபர் 30 | - | உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான வணிக வங்கிகளில் திறக்கப்பட்ட நாணயக் கடிதத்திற்கு எதிராக 100 சதவீதம் குறைந்தபட்ச காசு எல்லைத் தேவைப்பாடு 2015 திசெம்பர் 01 வரைக்கும் அமுல்படுத்தப்பட்டது. |
| 2015 நவெம்பர் 30 | - | பொது அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளி என்பவற்றை இணைப்பதற்கான கால எல்லையை மேம்படுத்துவதற்கு பொது அட்டை மற்றும் கொடுப்பனவு ஆளியின் இணைப்பிற்கான லங்கா கொடுப்பனவு கால எல்லை மீதான கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை 2015 இற்கான சுற்றறிக்கை இல.07 வெளியிடப்பட்டது. |
| 2015 திசெம்பர் 02 | - | கூட்டாண்மை தொடர்பில் வங்கிச் சட்ட அறிவுறுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் நோக்கில் உரிமம்பெற்ற வங்கிகளினுடைய பிரதான முகாமைத்துவ அலுவலராக, நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை செயலாற்றுகின்ற அலுவலர்களை கருத்தில் கொள்ளுமாறு உரிமம்பெற்ற வங்கிகள் அறிவுறுத்தப்பட்டன. |
| **அடுத்து வருபவை** | - | பாசல் III இன் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளுக்கான குறைந்தபட்ச மூலதன தேவைப்பாடு மற்றும் முடுக்கி விகிதத்தின் அமுலாக்கம். |

| | | |
|---|---|---|
| | - | வங்கிகளில் இடம்பெறும் சைபர் பாதுகாப்பு நிகழ்வுகள் சம்பந்தமான தகவல்களை வழங்குவதற்கு உரிமம்பெற்ற வங்கிகளை அறிவுறுத்தல். |
| | - | உரிமம்பெற்ற வங்கிகளுக்கான ஒரு நெருக்கடியை எதிர்கொள்ள தயாராகும் திட்டம் அமைத்தல். |

**ஏனைய நிதியியல் நிறுவனங்கள்**

2015 யூன் 23 - நிதிக்கம்பனிகளின் ஆண்டுக்கான உரிமக் கட்டணம் பின்வருமாறு அதிகரிக்கப்பட்டது.

| முன்னைய ஆண்டின் இறுதியிலான மொத்த சொத்துக்கள் | ஆண்டுக்கான உரிமக் கட்டணம் (ரூபா.) |
|---|---|
| ரூ. 5 பில்லியன் அல்லது கீழ் | 1,000,000 |
| ரூ. 5 பில்லியனுக்கு மேலாகவும் ரூ.10 பில்லியன் வரை | 1,500,000 |
| ரூ. 10 பில்லியனுக்கு மேலாகவும் ரூ. 20 பில்லியன் வரை | 2,000,000 |
| ரூ. 20 பில்லியனுக்கு மேல் | 3,000,000 |

உரிமக் கட்டண ஆண்டிற்கான செலுத்த வேண்டிய உரிமக் கட்டணம் ரூ.1 மில்லியனிலிருந்து 2 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

**ஏனையவை**

2015 மாச்சு 26 - பொறுப்பு ஏற்கப்பட்டு அறுபது நாட்களுக்குள்ளும் கோரிக்கை அடையாளம் காணப்பட்ட நேரத்திலும் அனைத்து காப்புறுதிக் கம்பனிகள் அவற்றின் காப்புறுதி கோரிக்கை பெறுமதிகளை தீர்ப்பதற்கு இலங்கை காப்புறுதிச் சபை காப்புறுதிக் கம்பனிகளுக்கு பணிப்புரையொன்றினை வழங்கியது.

2015 மாச்சு 30 - இலங்கை காப்புறுதிச் சபையானது, அனைத்து காப்புறுதி தரகுக் கம்பனிகளையும் 2015 செத்தெம்பர் 30 இலிருந்து குறைந்தபட்ச தேறிய மூலதனம் ரூ.1.125 மில்லியனையும் 2016 செத்தெம்பர் 30 இலிருந்து குறைந்தபட்ச மூலதனம் ரூ.2.5 மில்லியனையும் பேணுவதற்கு நிபந்தனையொன்றினை விதித்தது.

2015 ஏப்பிறல் 24 - பங்குகளின் ஆரம்ப பொது வழங்கலில் வழங்கல் விலையின் அடிப்படை தொடர்பான சட்டரீதியான வெளிப்படுத்தல்கள் மீது பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்புரை (எஸ்இச/எல்இஜி /14/12/41) இனை செயற்படுத்தும் விதமாக கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் பட்டியலிடும் விதிகள் திருத்தப்பட்டது.

2015 மே 27 - ஒவ்வொரு காப்புறுதியாளர் மற்றும் தரகர்களை, அவர்களுடன் காப்புறுதி முகவர்களாக (தனிப்பட்டவர்கள் தவிர்ந்த) பதிவினை மேற்கொள்வோரை இலங்கைக் காப்புறுதிச் சபையினால் பரிந்துரைக்கப்பட்ட வடிவிலான இல. 1916/10 இலக்கமுடைய ஒழுங்குவிதியை இலங்கைக் காப்புறுதிச் சபை வழங்கியது.

2015 மே 29 - சிறு உடைமையாளர் பெருந்தோட்ட தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களால் கடன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் ஏற்புடையதான வட்டிவீதமானது ஆண்டுக்கு 9 சதவீதத்திலிருந்து ஆண்டுக்கு 7 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டதுடன் இலங்கை மத்திய வங்கியினால் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடல் வசதிகளின் ஏற்புடையதான வட்டிவீதம் ஆண்டுக்கு 4 சதவீதத்திலிருந்து ஆண்டுக்கு 3 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

2015 யூன் 10 - தன்னியக்க வர்த்தகப்படுத்தலில் (படுகடன் பிணையங்கள் தவிர்ந்த) வர்த்தகம் செய்யப்படும் பிணையங்களின் “முடிவுறுத்தல் விலை”யினைக் கணிக்கும் முறைமையை 2015 யூன் 17 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை திருத்தியது.

| | | |
|---|---|---|
| 2015 யூலை 01 | - | நகை அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் தொழிற்படு காலமானது 2015 யூலை 01 இலிருந்து ஆரம்பித்து 2015 திசெம்பர் 31 வரை மேலும் ஆறுமாத காலத்திற்கு விரிவுபடுத்தப்பட்டது. |
| 2015 யூலை 06 | - | சிறு வேளாண்மை உற்பத்தியாளர்களுக்கான குறுங்கால கொடுகடனை வழங்கும் திட்டத்தின் கீழ் களஞ்சியசாலை பெறுகைகளை நிதியிடல் முறைமையினை அமுற்படுத்துவதனை கூட்டிணைப்பதற்கு, புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டது. |
| 2015 யூலை 10 | - | உள்நாட்டு அரசிறைத்திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை இல.எஸ்இசி/முத்திரைத் தீர்வை/2015/03 இனை செயற்படுத்துவதற்கு பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட/ பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களின் விண்ணப்பக் கட்டணம் திருத்தப்பட்டது. |
| 2015 ஓகத்து 07 | - | அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட “தேயிலை தொழிற்சாலைகளிற்கான தொழிற்பாட்டு மூலதன கடன் திட்டங்கள்” நடைமுறைப்படுத்துவதற்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. |
| 2015 செத்தெம்பர் 03 | - | வட்டி வீதம் மற்றும் அரச வட்டி மானியம் என்பன முறையே ஆண்டுக்கு 6 சதவீதம் மற்றும் 2 சதவீதமாக இரண்டு வருடங்களிற்கு நிலையாக வைத்திருப்பதனை உள்ளடக்கியவாறான தேயிலை தொழிற்சாலைகளிற்கான தொழிற்பாட்டு மூலதன கடன் திட்டங்களின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டது. அதன்பிறகு மொத்த வட்டி கடன் பெறுநர்களிடமிருந்து மீளப்பெறப்படும். |
| 2015 ஒத்தோபர் 09 | - | மீள் காப்புறுதி தொடர்பான வியாபாரம் தவிர்ந்த, சபையினுடைய முற்கூட்டிய எழுத்துமூல ஒப்புதல் இல்லாமல், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காப்புறுதி தொழிற்றுறைக்கான ஒழுங்கு விதிகளின் கீழ் பதியப்படாத காப்புறுதியாளருடனான எந்தவொரு காப்புறுதி வியாபாரமும் இலங்கையில் எவராலும் மேற்கொள்ள முடியாது என்ற கடல்கடந்த சுகாதாரக் காப்புறுதி மீதான சுற்றறிக்கை இல.36, இலங்கைக் காப்புறுதிச் சபையினால் வழங்கப்பட்டது. |
| 2015 ஒத்தோபர் 12 | - | வாடிக்கையாளர் வங்கி உறவு அடிப்படையில் வட்டி வீதத்தை தீர்மானிப்பதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை அனுமதிப்பதற்கான தேயிலைத் தொழிற்சாலைகளிற்கான தொழிற்பாட்டு மூலதன கடன் திட்டங்களின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன. |
| 2015 ஒத்தோபர் 21 | - | பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் மீது தொழிற்படும் காப்புறுதிக் கம்பனி மற்றும் நீண்ட காலக் காப்புறுதி வியாபாரத்தின் மீது தொழிற்படும் காப்புறுதிக் கம்பனி என்பன கொள்வனவுக் காப்புறுதியினை மேற்கொள்வதற்காக காப்புறுதி வியாபாரத்தைப் புரிவதற்கு காப்புறுதி முகவருக்கு கடுமையான இணங்குவிப்பு நடவடிக்கைகளுக்கு உட்பட்டு இலங்கைக் காப்புறுதிச் சபையால் அனுமதி வழங்கப்பட்டது. |
| 2015 நவெம்பர் 02 | - | 2 சதவீத அரச வட்டி மானியம் உள்ளடங்களாக நிறையேற்றப்பட்ட சராசரி முதன்மை கடன் வழங்கல் வீதத்துடன் 1.5 சதவீத எல்லையினை விஞ்சாத வீதத்தில் தேயிலை தொழிற்சாலைகளுக்கான தொழிற்பாட்ட மூலதன கடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்கு மிதக்கும் வட்டி வீதத்தில் அறவிடுவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டன. வட்டி மானியம் 2 வருட காலப்பகுதிக்கு மட்டும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதுடன் மொத்த வட்டி கடன் பெறுநர்களிடமிருந்து அதன்பிறகு மீளப்பெறப்படும். |
| 2015 நவெம்பர் 9 | - | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்டம் II மற்றும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்திட்டம் II சுழலும் நிதியம் என்பனவற்றின் கீழ் வழங்கப்பட்ட துணைக் கடன்களுக்கான வட்டி வீதம் ஆண்டிற்கு 12 வீதத்திலிருந்து 10 வீதமாக குறைக்கப்பட்டது. |
| 2015 திசெம்பர் 15 | - | கீழ்வருவனவற்றை உள்ளடக்குவதற்காக சௌபாக்கியா கடன் திட்டத்தின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் திருத்தப்பட்டன. |

| | | |
|---|---|---|
| | | - தேவைப்படுகின்ற செயற்றிட்ட மதிப்பீட்டுக்கான துணைக் கடனினுடைய தகுதியான எல்லையினை ரூ.500,000 இலிருந்து ரூ.1 மில்லியனுக்கு அதிகரிப்பதற்கு |
| | | - வழங்கப்பட்ட நிரந்தர பயிர்களின் அறுவடைக்கான கடன்களின் தயவுக்காலத்தினை செயற்திட்டத்தின் தன்மை அடிப்படையில் உயர்ந்தபட்சமாக 12 மாதங்கள் வரை விரிவுபடுத்துவதற்கு |
| | | - தகுதியாயிருப்பதற்கான சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறைக்கான ஆகக் குறைந்த 5 ஊழியர்களினுடைய தேவைப்பாட்டினை நீக்குவதற்கு இதன்படி, நிலம் மற்றும் கட்டிடங்கள் நீங்கலாக மொத்தச் சொத்துப் பெறுமதி ரூ.40 மில்லியனுக்கு கீழ் உள்ளதும் மற்றும் 100 ஆட்களைவிட குறைவான ஊழியர்களைக் கொண்டதுமான தொழில் துறையானது சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்கு தகுதியுடையது. |
| 2015 திசெம்பர் 31 | - | நகை அடகு முற்பணங்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் தொழிற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டது. |
| 2016 சனவரி 01 | - | பங்கு கொடுக்கல்வாங்கல்களுக்கான தீர்வை நீக்கப்பட்டது. |
| | - | 2016 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் இலங்கை காப்புறுதிச் சபையானது கடன் தீர்ப்பனவாற்றல் அளவு (இடர்நேர்வை அடிப்படையாகக் கொண்ட மூலதனம்) ஒழுங்கு விதிகளை அனைத்து காப்புறுதி கம்பனிகளும் இணங்கிநடப்பதற்கு வழங்கியது. |
| | - | குழந்தை ஒன்றிற்கு ஆகக்குறைந்த வைப்பு ரூ.250இனை வைப்பிடுவதன் மூலம் பாடசாலை செல்லும் குழந்தைகளுக்கு சேமிப்பு கணக்கினை திறப்பதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. |
| 2016 சனவரி 04 | - | 50 வீதத்திற்கு மேற்பட்ட பங்குகளை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் மற்றும் உரிமையாண்மை என்பவற்றின் மீதான மாற்றங்களுக்கு இலங்கை காப்புறுதிச் சபையிடமிருந்து ஒப்புதல் பெறுவதற்கு எல்லா காப்புறுதியாளர்கள் மற்றும் தரகர்களுக்கு காப்புறுதி தொழில்துறைக்கான ஒழுங்கு விதிகள் சட்டத்தின் பகுதி 96அ இன் கீழான அறிவுறுத்தலொன்று இலங்கை காப்புறுதிச் சபையினால் வழங்கப்பட்டது. |
| 2016 சனவரி 27 | - | 2016ஆம் ஆண்டிற்கான வாடிக்கையாளர் நெருங்கிய கண்ணோட்ட ஒழுங்கு விதிகள் இல.1 நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன. |